மல்கியா - முன்னுரை

காலமும் இடமும்

கி.மு. 557-525 ஆகிய வருஷங்களில் மல்கியா தீர்க்கதரிசியின் புஸ்தகம் பாலஸ்தீன தேசத்தில் எழுதப்பட்டது.

ஆசிரியர்

மல்கியா தீர்க்கதரிசி. (மல் 1:1)

மையக்கருத்து

1. இஸ்ரவேல் புத்திரர்மீது தேவனுடைய குற்றச்சாட்டுகள். ஆனால் தேவனுடைய குற்றச்சாட்டு நியாயமானவை அல்ல என்று இஸ்ரவேல் புத்திரர் மறுத்துப் பேசுகிறார்கள்.
2. மல்கியா புஸ்தகத்தில் தேவனுடைய 14 குற்றச்சாட்டுகளும் இஸ்ரவேல் புத்திரரின் பத்து முரண்பாடான பதில்களும் கொடுக்கப்பட்டுள்ளன.
3. கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனவனுடைய ஜீவியத்தில் மாய்மாலமான ஆவி கிரியை நடப்பிக்கும். அவன் எதையும் கேள்வி கேட்பான். தேவனுடைய வார்த்தைகளையும் நம்பாமல் விவாதம் பண்ணுவான். மனுஷரிடத்திலும், கர்த்தரிடத்திலும் தவறு காண முயற்சி பண்ணுவான்.
4. இஸ்ரவேல் புத்திரரின் ஏராளமான பாவங்களின் நிமித்தம் அவர்கள் கடிந்து கொள்ளப்படுகிறார்கள். அவர்களுடைய 32 பாவங்கள் மல்கியா புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது.
5. ஆகாயும், சகரியாவும் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்கள்மீது தேவனுடைய நியாயத் தீர்ப்பை முன்னறிவித்தார்கள். அவர்களை விட மல்கியா கடினமான வார்த்தைகளினால் இஸ்ரவேல் புத்திரரைக் கடிந்து கொள்கிறார்.
6. மல்கியாவின் புஸ்தகத்தில் இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையையும், இரண்டாம் வருகையையும் குறித்த அற்புதமான தீர்க்கதரிசனங்கள் இடம் பெற்றுள்ளன. (மல் 3:1-5)
7. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு எலியா, ஏனோக்கு, ஆகியோரின் ஊழியங்களைப் பற்றியும், இந்தப் புஸ்தகத்தில் விவரிக்கப் பட்டிருக்கிறது. (மல் 3:17-4:6).

மல்கியா புஸ்தகத்தின் முக்கியமான நோக்கம் வருமாறு:

1. சிறையிருப்பிலிருந்து திரும்பி வரும் யூதர்களுடைய பாவங்களின் நிமித்தமாக அவர்களைக் கடிந்து கொள்வது.
2. சிறையிருப்பிலிருந்து யூதர்கள் திரும்பி வரும்போது அவர்கள் ஒருதேசமாக மறுபடியும் ஸ்தாபிக்கப்படப்போவதை அவர்களுக்கு அறிவிப்பது.
3. சிறையிருப்பிலிருந்து வந்த யூதர்களுடைய முற்பிதாக்களின் பாவங்களைக் கர்த்தர் பொறுத்துக் கொள்ளவில்லை. அது போலவே இவர்களுடைய பாவங்களையும் அவர் பொறுத்துக் கொள்ளமாட்டார் என்று அவர்களுக்கு எடுத்துக்கூறுவது.
4. யூதருடைய முற்பிதாக்கள் பாவம் செய்ததினால் அழிந்துபோனார்கள், அவர்களுடைய தேசம் அழிந்துபோயிற்று, அவர்கள் சிறையிருப்புக்குட்பட்டார்கள் என்னும் செய்தியைச் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களுக்கு அறிவிப்பது.
5. அவர்கள் தொடர்ந்து பாவம் செய்தால், அவர்கள்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்று எச்சரிப்பது.
6. இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போதும், இரண்டாம் வருகையின் போதும் நடைபெறும் நிகழ்ச்சிகளை முன்னறிவிப்பது.

மல்கியா - முன்னுரை

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 4

வசனங்கள் - 55

கேள்விகள் - 27

புதிய தீர்க்கதரிசனங்கள் - 5

கட்டளைகள் - 5

வாக்குத்தத்தங்கள் - 5

முன்னறிவிப்புக்கள் - 30

மல்கியா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் தேவனிடத்திலிருந்து வந்திருக்கும் விசேஷித்த செய்திகள். (மல் 1:2,6,7,8,9,10,11,12,13,14; மல் 2:1,4,8, 11,16,17; மல் 3:1,5,7,8,10,11,12, 13,14,17; மல் 4:1).

பொருளடக்கம்

I. தேவன் யாக்கோபை சிநேகித்து, ஏசாவை வெறுத்தார் (1:1-5)

II. இஸ்ரவேலின் பாவங்கள்

1. ஆசாரியர்களின் பாவங்கள்

(1) தேவனுடைய நாமத்தை அசட்டை பண்ணினார்கள் (1:6)

(2) அவர்களுடைய பாவமான காணிக்கைகள் (1:7-10)

(3) தேவனுடைய ஆயிர வருஷ நோக்கம் - உலகளாவிய உண்மையான மார்க்கம் (1:11)

(4) அவர்களுடைய மாய் மாலமும் தேவனுக்கு அவர்கள் செலுத்திய கெட்டுப்போன காணிக்கைகளும் (1:12-14)

(5) ஆசாரியர் களுக்குக் கட்டளைகள் (2:1-2)

(6) ஆசாரியர்கள் மீது நியாயத்தீர்ப்பு (2:3-4)

(7) லேவியரோடு உடன்படிக்கை (2:5-7)

(8) கீழ்ப்படியாமையும் நியாயத் தீர்ப்பும் (2:8-9)

2. ஜனங்களுடைய பாவங்கள்

(1) தேவனுக்கும் மனுஷனுக்கும் யூதா செய்த துரோகம் (2:10-11)

(2) துரோகத்திற்கு நியாயத்தீர்ப்பு (2:12)

(3) யூதாவின் மாய்மாலம் (2:13)

(4) மனைவிகளுக்குத் துரோகம் - எச்சரிப்பு (2:14-16)

(5) தேவன் அநீதியானவரென்று அவர்மீது குற்றச்சாட்டு (2:17)

III. மேசியாவின் முதலாவது வருகையும் இரண்டாவது வருகையும்

1. மேசியாவின் முதலாவது வருகை (3:1)

2. மேசியாவின் இரண்டாவது வருகை - கலகக்காரர்கள் இஸ்ரவேலிலிருந்து அகற்றப்படுவார்கள் (3:2-3)

3. அப்பொழுது - இஸ்ரவேல் மீட்கப்படும் (3:4)

4. எல்லோருக்கும் பரிபூரண நீதி கிடைக்கும் - யூதாவின் எட்டு பாவங்கள் (3:5-6)

IV. இஸ்ரவேலின் பாவங்கள்

1. யூதாவின் பின்மாற்றங்கள் (3:7)

2. தேவனை வஞ்சித்தது - சாபம் (3:8-9)

3. கட்டளையும் அறைகூவலும் (3:10)

4. ஏழு அம்ச ஆசீர்வாதம் (3:10-12)

5. தேவனுக்கு எதிராக முறுமுறுப்பும் கலகமும் (3:13-14)

6. துன்மார்க்கர் உயர்த்தப்பட்டு நியாயத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் (3:15)

மல்கியா - முன்னுரை

V. கர்த்தருடைய நாள்

1. கர்த்தருடைய நாளுக்கான ஆயத்தம் - மீதியாக இருக்கும் உண்மையுள்ளவர்கள் *(3:16)*

2. தமது சம்பத்தைச் சேர்ப்பதற்கு மேசியாவின் இரண்டாவது வருகை *(3:17)*

3. இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறது *(3:18)*

4. தேவபக்தியற்றவர்களின் அழிவு *(4:1)*

5. நீதிமானுக்கு இரட்சிப்பு *(4:2)*

6. அர்மகெதோனில் துன்மார்க்கர் நீதிமான்களுடைய உள்ளங் கால்களின்கீழ் சாம்பலாயிருப்பார்கள் *(4:3)*

7. யூதாவிற்கு கடைசி புத்திமதி *(4:4)*

8. மேசியாவின் முதலாவது வருகைக்கு முன்பு யூதாவிற்கு கூறப்பட்ட கடைசி தீர்க்கதரிசனம் - மேசியாவின் இரண்டாவது வருகைக்கு முன்பாக யூதாவிற்கு ஊழியம் செய்வதற்கு எலியா திரும்பி வருவார் *(4:5-6)*

மல்கியா - தொகுப்புரை

1 அதிகாரம்

I. தேவன் யாக்கோபை சிநேகித்து, ஏசாவை வெறுத்தார் - (எரே 49:7)

மல் 1:1 மல்கியாவைக்கொண்டு கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சொன்ன வார்த்தையின் பாரம்.

மல் 1:2 நான் உங்களைச் சிநேகித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அதற்கு நீங்கள்: எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்கிறீர்கள்; கர்த்தர் சொல்லுகிறார்: ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவோ? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன்.

மல் 1:3 ஏசாவையோ நான் வெறுத்தேன்; அவனுடைய மலைகளைப் பாழும், அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன்.

மல் 1:4 ஏதோமியர்: நாம் எளிமைப் பட்டோம்; ஆனாலும் பாழானவைகளைத் திரும்பக் கட்டுவோம் என்று சொல்லுகிறார்கள்; அதற்குக் கர்த்தர்: அவர்கள் கட்டுவார்கள், நான் இடிப்பேன். அவர்கள் துன்மார்க்கத்தின் எல்லையென்றும், கர்த்தர் என்றைக்கும் சினம் வைக்கிற ஜனமென்றும் சொல்லப்படுவார்கள் என்கிறார்.

மல் 1:5 இதை உங்கள் கண்கள் காணும். அப்பொழுது நீங்கள்: கர்த்தர் இஸ்ரவேலுடைய எல்லை துவங்கி மகிமைப்படுத்தப்படுவார் என்பீர்கள்.

"மல்கியா" **(Malachi)** - இந்தப் பெயருக்கு "என் தூதன்" **"My messenger"** என்று பொருள்.

"கர்த்தர் இஸ்ரவேலுக்குச் சொன்ன வார்த்தையின் பாரம்" - மல்கியா, நாகூம், ஆபகூக் ஆகிய மூவரும் தங்களுடைய தீர்க்கதரிசன புஸ்தகங்களின் ஆரம்பத்தில் "கர்த்தருடைய வார்த்தையின் பாரம்" என்று கூறி ஆரம்பிக்கிறார்கள். (மல் 1:1; நாகூம் 1:1; ஆப 1:1).

"இஸ்ரவேல்" - இந்த வார்த்தை சிறையிருப்பிலிருந்து திரும்பிய யூதாவையும், இஸ்ரவேலையும் குறிக்கிறது. (மல் 1:1,5; மல் 2:11,16; மல் 4:4). இவர்கள் மூன்று இடங்களில் "யூதா" என்று அழைக்கப் படுகிறார்கள். (மல் 2:11; மல் 3:4). சகரியா இவர்களை யூதா என்றும், இஸ்ரவேல் என்றும் அழைக்கிறார். (சக 1:19; சக 8:13; சக 11:14) இதுதவிர, சகரியா 22 இடங்களில் இவர்களை "யூதா" என்னும் பெயரை மாத்திரம் பயன்படுத்தி அழைக்கிறார். (சக 1:12,19,21; சக 2:12; சக 8:13-19; சக 9:7,13; சக 10:3,6; சக 11:14; சக 12:2-7; சக 14:5,14,21).

"யாக்கோபை நான் சிநேகித்தேன்" - இந்த வாக்கியம் ரோமர் 9:13 ஆவது வசனத்தில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது.

தேவன் இஸ்ரவேலுக்குக் கூறிய செய்திகளும், இஸ்ரவேலின் கலகமான மறுமொழிகளும்

1. நான் உங்களைச் சிநேகித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அதற்கு நீங்கள்: எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்கிறீர்கள் (மல் 1:2).

2. நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்; அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டை பண்ணினோம் என்கிறீர்கள். (மல் 1:6).

மல்கியா - தொகுப்புரை

1 அதிகாரம்

3. என் பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதினாலேயே; ஆனாலும் உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம் என்கிறீர்கள் (மல் 1:7).

4. நீங்களோ கர்த்தருடைய பந்தி அசுத்தமானது என்றும், அதின் ஆகாரமாகிய அதின் பலன் அற்பமானது என்றும் சொல்லுகிறதினாலே, என் நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறீர்கள். (மல் 1:12).

5. இதோ, இது எவ்வளவு வருத்தமென்று சொல்லி, அதை ஒரு திரணமாய்ப் பேசுகிறீர்கள். (மல் 1:13).

6. பீறுண்டதையும் கால் ஊனமானதையும் நசல் கொண்டதையும் கொண்டுவந்து காணிக்கையாகச் செலுத்துகிறீர்கள்.

7. யூதா ஜனங்கள் துரோகம்பண்ணினார்கள் (மல் 2:11).

8. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கினார்கள்.

9. கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் மாய்மாலமாக நிரப்புகிறார்கள் (மல் 2:13-14)

10. உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப்படுத்துகிறீர்கள்; ஆனாலும் எதினாலே அவரை வருத்தப்படுத்துகிறோம் என்கிறீர்கள் (மல் 2:17)

11. என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; நாங்கள் எந்த விஷயத்தில் திரும்பவேண்டும் என்கிறீர்கள். (மல் 3:7)

12. மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலும்தானே. (மல் 3:8).

13. நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுகள் கடினமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும் உமக்கு விரோதமாக என்னத்தைப் பேசினோம் என்கிறீர்கள். (மல் 3:13)

14. தேவனைச் சேவிப்பது விருதா, அவருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம்? என்று சொல்லுகிறீர்கள். (மல் 3:14)

"ஏசாவையோ நான் வெறுத்தேன்" - வெறுத்தல் என்னும் வார்த்தை ஒரு மொழிமரபாகும் **(idiom)**. இதற்கு தேர்ந்தெடுத்தல் **(preference)** என்று பொருள். (லூக்கா 14:25-27) கர்த்தரிடத்தில் பட்சபாதம் இல்லை. இங்கு கர்த்தர் மூத்தவனுக்குப் பதிலாக இளையவனைத் தெரிந்தெடுக்கிறார். ஏசா வேசிக்கள்ளனாக இருந்தான். ஒருவேளை போஜனத்திற்காகத் தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்டான். (எபி 12:16-17) யாக்கோபோ கர்த்தரை நேசித்தான். கர்த்தருடைய சித்தத்தைச் செய்ய வேண்டுமென்று தாகத்தோடு இருந்தான்.

"வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்கள்" - **(Jackals)** (ஏசா 13:22;ஏசா34:13; எரே 9:11; எரே 10:22; எரே 49:33; எரே 51:37).

தீர்க்கதரிசன எண் - 1

"அதற்குக் கர்த்தர்: அவர்கள் கட்டுவார்கள், நான் இடிப்பேன்......என்கிறார்" (மல் 1:4-5) இந்தத் தீக்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. அவர்கள் கட்டுவார்கள், நான் இடிப்பேன் (மல் 1:4).

மல்கியா - தொகுப்புரை

1 அதிகாரம்

2. அவர்கள் துன்மார்க்கத்தின் எல்லையென்றும், கர்த்தர் என்றைக்கும் சினம் வைக்கிற ஜனமென்றும் சொல்லப்படுவார்கள்.

3. இதை உங்கள் கண்கள் காணும். அப்பொழுது நீங்கள்: கர்த்தர் இஸ்ரவேலுடைய எல்லை துவங்கி மகிமைப்படுத்தப்படுவார் என்பீர்கள். (மல் 1:5).

II. இஸ்ரவேலின் பாவங்கள் - (1:6-2:17)

1. ஆசாரியர்களின் பாவங்கள் - (1:6-2:9)

(1) தேவனுடைய நாமத்தை அசட்டை பண்ணினார்கள்

மல் 1:6 குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்; அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டை பண்ணினோம் என்கிறீர்கள்.

மல்கியா புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் பாவங்கள்

1. தேவனைக் கனம்பண்ணாமல் இருப்பது. (மல் 1:6)
2. தேவனிடத்தில் பயபக்தியின்மை
3. தேவனுடைய நாமத்தை அசட்டை பண்ணுதல்.
4. கர்த்தருடைய பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைப்பது. (மல் 1:7)
5. தேவனுடைய பந்தியைப் பற்றி எண்ணமற்றிருப்பது. (மல் 1:7,12)
6. கால் ஊனமானதையும், நசல்பிடித்ததையும் கர்த்தருக்குப் பலியாகச் செலுத்துவது. (மல் 1:8,13)
7. கர்த்தருடைய பந்தியை அசுத்தப்படுத்துவது. (மல் 1:12)
8. உண்மையற்றிருப்பது. (மல் 1:13)
9. வஞ்சிப்பது. (மல் 1:14)
10. தேவனுக்கு மகிமையைச் செலுத்தாமல் இருப்பது. (மல் 2:2)
11. கர்த்தருடைய வழியை விட்டு விலகுவது. (மல் 2:8)
12. மற்றவர்களை இடறப்பண்ணுவது.
13. கலகம் பண்ணுவது. (மல் 2:8-9)
14. பிரமாணத்தை மீறுவது. (மல் 2:9)
15. உடன்படிக்கையைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவது. (மல் 2:10)
16. துரோகம் பண்ணுவது. (மல் 2:11)
17. கர்த்தருடைய பரிசுத்தத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குவது.
18. அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம்பண்ணுவது.
19. மாய்மாலம் (மல் 2:13; மல் 3:14)
20. உண்மையின்மை (மல் 2:14-16)
21. பாவத்தை மூடுவது (மல் 2:16)
22. வார்த்தைகளினால் கர்த்தரை வருத்தப் படுத்துவது. (மல் 2:17)
23. பாவத்தைத் தனக்குத்தானே மன்னித்துக் கொள்வது.
24. சூனியம் (மல் 3:5)
25. விபசாரம்
26. பொய்யாணையிடுதல்

மல்கியா - தொகுப்புரை

1 அதிகாரம்

27. திக்கற்ற பிள்ளைகளை ஒடுக்குதல்
28. தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் விலகிப்போவது. (மல் 3:7)
29. தசமபாகத்திலும், காணிக்கைகளிலும் தேவனை வஞ்சிப்பது. (மல் 3:8-9)
30. தேவனுக்கு விரோதமாகப் பேசுவது. (மல் 3:13)
31. தீமை செய்வது. (மல் 3:15)
32. தேவனைப் பரீட்சை பார்ப்பது.

(2) அவர்களுடைய பாவமான காணிக்கைகள்

மல் 1:7 என் பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதினாலேயே; ஆனாலும் உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம் என்கிறீர்கள்; கர்த்தருடைய பந்தி எண்ணமற்றுப் போயிற்றென்று நீங்கள் சொல்லுகிறதினாலேயே.

மல் 1:8 நீங்கள் கண் ஊனமானதைப் பலியிடக்கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல, நீங்கள் காலூனமானதையும் நசல் பிடித்ததையும் கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறீர்களே; அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்.

மல் 1:9 இப்போதும் தேவனுடைய சமுகத்தை நோக்கிக் கெஞ்சுங்கள்; அப்பொழுது நம்மேல் இரங்குவார்; இது உங்களாலே வந்த காரியம், அவர் உங்களை அங்கீகரிப்பாரோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்.

மல் 1:10 உங்களில் எவன் கூலியில்லாமல் கதவுகளைப் பூட்டுவான்; என் பலிபீடத்தின்மேல் அக்கினியைக் கூலியில்லாமல் கொளுத்தவுமாட்டீர்கள்; உங்கள்பேரில் எனக்குப் பிரியமில்லையென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் கைகளிலுள்ள காணிக்கை எனக்கு உகந்ததல்ல.

(3) தேவனுடைய ஆயிர வருஷ நோக்கம் - உலகளாவிய உண்மையான மார்க்கம்

மல் 1:11 சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 2

"சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசைவரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்....." (மல் 1:11) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. சூரியன் உதிக்கிற திசை தொடங்கி, அது அஸ்தமிக்கிற திசைவரைக்கும், என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும். (மல் 1:11).
2. எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபம் செலுத்தப்படும்.
3. எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குச் சுத்தமான காணிக்கை செலுத்தப்படும்.

இந்தத் தீர்க்கதரிசனம் ஆயிரம் வருஷ அரசாட்சியில் இயேசு கிறிஸ்துவின்கீழ் நிறைவேறும். எல்லா தேசத்தார் மத்தியிலும் சுத்தமான ஒரே மார்க்கம் இருக்கும்.

மல்கியா - தொகுப்புரை

1 அதிகாரம்

(4) அவர்களுடைய மாயமாலமும் தேவனுக்கு அவர்கள் செலுத்திய கெட்டுப்போன காணிக்கைகளும் - (ஏசா 1:10)

மல் 1:12 நீங்களோ கர்த்தருடைய பந்தி அசுத்தமானது என்றும், அதின் ஆகாரமாகிய அதின் பலன் அற்பமானது என்றும் சொல்லுகிறதினாலே, என் நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறீர்கள்.

மல் 1:13 இதோ, இது எவ்வளவு வருத்தமென்று சொல்லி, அதை ஒரு திரணமாய்ப் பேசி, பீறுண்டதையும் கால் ஊனமானதையும் நசல் கொண்டதையும் கொண்டுவந்து காணிக்கையாகச் செலுத்துகிறீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; அதை உங்கள் கைகளில் அங்கீகரித்துக்கொள்வேனோ என்று கர்த்தர் கேட்கிறார்.

மல் 1:14 தன் மந்தையில் கடா இருக்கையில் கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்து கொண்டு பலியிடுகிற கபடஸ்தன் சபிக்கப்பட்டவன்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே பயங்கரமாயிருக்கும்; நான் மகத்துவமான ராஜா என்று சேனைகளின்கர்த்தர் சொல்லுகிறார்.

"கர்த்தருடைய பந்தி அசுத்தமானது" - ஆசாரியர்கள் கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறார்கள். கர்த்தருக்காக அவர்கள் கவனத்தோடு ஊழியம் செய்யவில்லை. ஆகையினால் கர்த்தருடைய பந்தி அசுத்தமாயிருக்கிறது. கர்த்தருக்கு ஊழியம் செய்வதைச் சந்தோஷத்தோடும், மன உற்சாகத்தோடும் ஆசாரியர்கள் செய்யவில்லை. மனவருத்தத்தோடு செய்கிறார்கள். ஆசாரிய ஊழியத்தை அவர்கள் அசட்டை பண்ணுகிறார்கள்.

"பீறுண்டதையும் கால் ஊனமானதையும் நசல்கொண்டதையும் கொண்டுவந்து காணிக்கையாகச் செலுத்துகிறீர்கள்" - இப்படி காணிக்கை செலுத்துவது நியாயப் பிரமாணத்திற்குப் புறம்பானது. பழுதற்ற ஆட்டுக்குட்டியையே கர்த்தருக்குக் காணிக்கையாகச் செலுத்த வேண்டும். பழுதானவற்றைக் கர்த்தர் அங்கிகரிக்கமாட்டார். (லேவி 1:3,10; லேவி 3:1,6; லேவி 4:3,23,28,32; லேவி 5:15,18; லேவி 6:6; லேவி 9:2-3).

"கபடஸ்தன்" **(the deceiver)** - தன்னிடத்தில் பழுதற்ற ஆடுகள் இருந்தாலும் அவற்றைத் தனக்கென்று வைத்துக்கொண்டு தன்னிடத்திலுள்ள ஊனமான ஆடுகளைக் கர்த்தருக்குப் பலியாகச் செலுத்துகிறவன். இவன் ஒரு ஏமாற்றுக்காரன்.

"நான் மகத்துவமான ராஜா என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." - கர்த்தருடைய நாமம் ஜாதிகளுக்குள்ளே பயங்கரமாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தர் பல அறிவுரைகளைக் கூறுகிறார். (மல் 1:6-14) அவர்கள் கர்த்தரைக் கனம்பண்ண வேண்டுமென்றும், கர்த்தரிடத்தில் பயபக்தியாய் இருக்க வேண்டுமென்றும் அவர்களுக்கு அறிவுரை கூறுகிறார். அவர் மகத்துவமானவர். சேனைகளின் கர்த்தர். சர்வ சிருஷ்டியையும் சிருஷ்டித்தவர். ஆகையினால் மனுஷர் அவருக்குரிய கனத்தைச் செலுத்த வேண்டும்.

மல்கியா - தொகுப்புரை

2 அதிகாரம்

(5) ஆசாரியர்களுக்குக் கட்டளைகள்

மல் 2:1 இப்போதும் ஆசாரியர்களே, இந்தக் கட்டளை உங்களுக்குரியது.

மல் 2:2 நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்; ஆம், நீங்கள் அதைச் சிந்தியாமற்போனதினால் அவைகளைச் சபித்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"இந்தக் கட்டளை உங்களுக்குரியது" - ஆசாரியர்களுக்கு இந்தக் கட்டளை கொடுக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் பின்வாங்கிப்போனதற்கு ஆசாரியர்களே பொறுப்பேற்க வேண்டும். ஆகையினால் கர்த்தர் அவர்களுக்கு விசேஷித்த கட்டளைகளைக் கொடுக்கிறார். அதன் அடிப்படையில் அவர்களுடைய வருங்கால ஆசீர்வாதங்கள் அமைந்திருக்கும். (மல் 2:1-2).

தீர்க்கதரிசன எண் - 3

"நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்....." (மல் 2:2-4) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்புவேன். (மல் 2:2).
2. உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்.
3. நான் உங்களுடைய பயிரைக் கெடுப்பேன். (மல் 2:3).
4. உங்கள் பண்டிகைகளின் சாணியையே உங்கள் முகங்களில் இறைப்பேன்.
5. அதனோடுகூட நீங்களும் தள்ளுபடியாவீர்கள்.
6. இந்தக் கட்டளையை உங்களிடத்திற்கு அனுப்பினேன் என்கிறதை அப்பொழுது அறிந்துகொள்வீர்கள் (மல் 2:4)

இந்தத் தீர்க்கதரிசனத்தைக் கர்த்தர் அறிவிக்கிறார். ஆசாரியர்கள் இந்தக் கட்டளைகளைக் கேட்காமலும், அவருடைய நாமத்திற்கு மகிமையைச் செலுத்தாமலும் இருந்தால் கர்த்தர் அவர்களுக்குச் சாபத்தை அனுப்புவார். அவர்களுடைய ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவார். இது ஒரு நிபந்தனையுள்ள தீர்க்கதரிசனம். ஆசாரியர்கள் கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை என்றால் இந்தச் சாபங்களெல்லாம் அவர்கள்மீதும், அவர்களால் அசுசிப்படுத்தப்பட்ட ஜனங்கள்மீதும் வரும். (லூக்கா 21:20-24).

(6) ஆசாரியர்கள்மீது நியாயத்தீர்ப்பு

மல் 2:3 இதோ, நான் உங்களுடைய பயிரைக் கெடுத்து, உங்கள் பண்டிகைகளின் சாணியையே உங்கள் முகங்களின் இறைப்பேன்; அதனோடுகூட நீங்களும் தள்ளுபடியாவீர்கள்.

மல் 2:4 லேவியோடே பண்ணின என் உடன்படிக்கை நிலைத்திருக்கும்படிக்கு இந்தக் கட்டளையை உங்களிடத்திற்கு அனுப்பினேன் என்கிறதை அப்பொழுது அறிந்துகொள்வீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

(7) லேவியரோடு உடன்படிக்கை - (எண் 25:10-13; ஆதி 1:14)

மல் 2:5 அவனோடே பண்ணின என் உடன்படிக்கை ஜீவனும் சமாதானமுமாக இருந்தது; அவன் எனக்குப் பயப்படும் பயத்தோடே இருக்கவேண்டுமென்று, இவைகளை அவனுக்குக் கட்டளையிட்டேன்; அப்படியே அவன் என் நாமத்துக்குப் பயந்தும் இருந்தான்.

2 அதிகாரம்

மல் 2:6 சத்தியவேதம் அவன் வாயில் இருந்தது; அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை; அவன் என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து, அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினான்.

மல் 2:7 ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்.

"அவனோடே பண்ணின என் உடன்படிக்கை ஜீவனும் சமாதானமுமாக இருந்தது" - (எண் 25:10-13; உபா 33:8-10)

"அவன் எனக்குப் பயப்படும் பயத்தோடே இருக்கவேண்டும்" - இந்த வாக்கியம் லேவியையும் (யாத் 32:26-29), பினெகாசையும் (எண் 25:10-13) குறிக்கலாம்.

"சத்தியவேதம் அவன் வாயில் இருந்தது" - மற்றவர்களுக்கு ஆசாரியர் சத்தியத்தை உபதேசிக்கிறார்கள். அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படவில்லை.

"அறிவு" - இந்த வார்த்தை பிரமாணத்தைக் குறிக்கிறது. ஜனங்கள் கர்த்தருடைய பிரமாணத்தை ஆசாரியரின் வாயிலிருந்து பெற்றுக் கொண்டு, தங்களுடைய பிள்ளைகளுக்கும் அதைக் கற்பிக்க வேண்டும். (உபா 17:9-11).

மல்கியா புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் தூதர்கள்

1. மல்கியா (மல் 1:1)
2. மெய்யான ஆசாரியன் (மல் 2:7)
3. யோவான் ஸ்நானன் (மல் 3:1)
4. மேசியா (மல் 3:1-3)
5. எலியா (மல் 4:4-5)

(8) கீழ்ப்படியாமையும் நியாயத் தீர்ப்பும்

மல் 2:8 நீங்களோ வழியைவிட்டு விலகி, அநேகரை வேதத்தைக்குறித்து இடறப் பண்ணினீர்கள்; லேவியின் உடன் படிக்கையைக் கெடுத்துப் போட்டீர்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

மல் 2:9 நீங்கள் என் வழிகளைக் கைக்கொள்ளாமல் வேதத்தைக் குறித்துப் பட்சபாதம் பண்ணின படியினால் நானும் உங்களை எல்லா ஜனத்துக்கு முன்பாகவும் அற்பரும் நீசருமாக்கினேன்.

ஆசாரியரின் பாவங்கள்

1. வழியைவிட்டு விலகினார்கள்.
2. அநேகரை வேதத்தைக்குறித்து இடறப் பண்ணினார்கள்.
3. லேவியின் உடன்படிக்கையைக் கெடுத்துப் போட்டார்கள்.
4. தேவனுடைய வழிகளைக் கைக்கொள்ள வில்லை. (மல் 2:9).
5. வேதத்தைக்குறித்துப் பட்சபாதம் பண்ணினார்கள். (மல் 2:9).

"உங்களை எல்லா ஜனத்துக்கு முன்பாகவும் அற்பரும் நீசருமாக்கினேன்" - நியாயப் பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதில் ஆசாரியர்கள் பட்சபாதம் காண்பிக்கிறார்கள். ஆகையினால் அவர்களுக்கு விசேஷித்த நியாயத்தீர்ப்பு கொடுக்கப்படுகிறது.

2. ஜனங்களுடைய பாவங்கள் - (2:10-17)

(1) தேவனுக்கும் மனுஷனுக்கும் யூதா செய்த துரோகம்

மல் 2:10 நம்மெல்லாருக்கும் ஒரே பிதா இல்லையோ? ஒரே தேவன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ? நாம் நம்முடைய பிதாக்களின் உடன் படிக்கையைப் பரிசுத்தக் குலைச்சலாக்கி, அவனவன் தன் தன் சகோதரனுக்குத் துரோகம் பண்ணுவானேன்?

மல்கியா - தொகுப்புரை

2 அதிகாரம்

மல் 2:11 யூதா ஜனங்கள் துரோகம் பண்ணினார்கள்; இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்யப்பட்டது; கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்தக்குலைச்சலாக்கி அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்.

"பிதாக்களின் உடன்படிக்கை" - மோசேயின் உடன்படிக்கை.

"ஒரே பிதா" - கர்த்தர் ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்தார். நம் எல்லோருக்கும் இவர்களே பெற்றோராக இருக்கிறார்கள். கர்த்தர் இவர்களை மாத்திரம் சிருஷ்டித்தார். மற்றவர்கள் இவர்களுக்குப் பிறந்தவர்கள். அல்லது இவர்களுடைய சந்ததியில் பிறந்திருக்கிறவர்கள்.

கர்த்தரை விசுவாசிக்கிறவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். கர்த்தரை விசுவாசிக்காதவர்கள் சாத்தானின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். ஒருவன் கர்த்தருடைய பிள்ளையாக இருக்கவேண்டுமா அல்லது சாத்தானுடைய பிள்ளையாக இருக்க வேண்டுமா என்பதை அவனே தீர்மானம் பண்ணிக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய பிள்ளைக்குக் கர்த்தரை "அப்பா பிதாவே" என்று அழைக்கும் சிலாக்கியம் கொடுக்கப் பட்டிருக்கிறது. கர்த்தருடைய பிள்ளை பரிசுத்த ஆவியானவரில் மறுபடியும் பிறந்திருக்கிறான். கர்த்தருடைய குடும்பத்தில் சுவிகாரம் பெற்றிருக்கிறான். (யோவான் 3:3-5; ரோமர் 8:14-16) பாவிகள் கர்த்தருடைய பிள்ளைகளல்ல. மனுஷன் தன்னுடைய சுயாதீன சித்தத்தைப் பயன்படுத்தி, கர்த்தரைத் தன் தேவனாக அங்கிகரித்து தேவனுடைய பிள்ளையாக ஆக முடியும். (யோவான் 8:44; எபே 2:1-3; 1யோவான் 3:8) ஒருவன் கிறிஸ்துவிற்குள் இருந்தால் அவன் புது சிருஷ்டியாயிக்கிறான். கர்த்தரே அவனுக்குப் புதிய சிருஷ்டியைக் கொடுக்கிறார். எல்லோரும் ஆதாமின் சந்ததியில் வந்தவர்களாக இருந்தாலும், இரட்சிக்கப்பட்டவர்களே கர்த்தருடைய பிள்ளைகளாக இருக்கிறார்கள். (2கொரி. 5:17-18; எபே 2:10; எபே 4:24). இரட்சிக்கப் படாதவர்கள் பிசாசின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். அவர்கள் அழிவுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். (எபே 2:1-3; 1யோவான் 3:8-10)

"யூதா" - மல் 1:1 ஆவது வசனத்தில் இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டிருப்பவர்கள். இந்த வசனத்திலும், மல் 3:4 ஆவது வசனத்திலும், யூதா என்று அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வசனத்தில் யூதா, இஸ்ரவேல் எனவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

யூதாவின் பாவங்கள்

1. யூதா ஜனங்கள் துரோகம் பண்ணினார்கள்.
2. இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியம் செய்தார்கள்.
3. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கினார்கள்.
4. அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்.

"அந்நிய தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்" - அந்நிய தேசத்து விக்கிரகாராதனையில் வேசித்தனமும், விபசாரமும் நிறைந்திருக்கிறது. யூதாவின் ஜனத்தார் அவர்களை விவாகம் பண்ணி, பாவம் செய்கிறார்கள்.

(2) துரோகத்திற்கு நியாயத்தீர்ப்பு

மல் 2:12 இப்படிச் செய்கிறவன் எவனோ, அவன் காவல்காக்கிறவனாயினும், உத்தரவு கொடுக்கிறவனாயினும், சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துகிறவனாயினும், அவனை யாக்கோபின் கூடாரங்களில் இராத படிக்குக் கர்த்தர் சங்கரிப்பார்.

2 அதிகாரம்

"இப்படிச் செய்கிறவன் எவனோ" - மல் 2:11 ஆவது வசனத்தில் கூறப்பட்டிருக்கும் பாவங்களைச் செய்கிறவன் யாராக இருந்தாலும் கர்த்தர் அவனை யாக்கோபின் கூடாரங்களில் இராதபடிக்குச் சங்கரிப்பார். அவன் வேதவாக்கியங்களில் சாதுரியவானாக இருந்தாலும், தீர்க்கதரிசியாக இருந்தாலும், ஆசாரியனாக இருந்தாலும், பிரபுவாக இருந்தாலும், சாதாரண ஜனமாக இருந்தாலும் பாவம் செய்கிறவர்களைக் கர்த்தர் பட்சபாதம் பாராமல் சங்கரிப்பார்.

"சேனைகளின் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துகிறவன்"- இவன் விக்கிரகத்திற்கும் காணிக்கை செலுத்துகிறான். சேனைகளின் கர்த்தருக்கும் காணிக்கை செலுத்துகிறான்.

(3) யூதாவின் மாய்மாலம்

மல் 2:13 நீங்கள் இரண்டாந்தரமும் இதைச் செய்து, கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்புகிறீர்கள்; ஆகையால், அவர் இனிக் காணிக்கையை மதியார், அதை உங்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக்கொள்ளவுமாட்டார்.

"நீங்கள் இரண்டாந்தரமும் இதைச் செய்து" - யூதாவின் புத்திரர் இதற்கு முன்பாகவே மாய்மாலமாக ஜீவித்திருக்கிறார்கள். கர்த்தருடைய பீடத்தைக்கண்ணீரினாலும்அழுகையினாலும் பெருமூச்சினாலும் நிரப்புவது போல நடிக்கிறார்கள். பலதடவை இதைப்போல மாய்மாலம் பண்ணுகிறார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களுடைய காணிக்கையை மதியார். அதை அவர்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக்கொள்ளவுமாட்டார்.

(4) மனைவிகளுக்குத் துரோகம் - எச்சரிப்பு

மல் 2:14 ஏன் என்று கேட்கிறீர்கள்; கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்; உன்தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே.

மல் 2:15 அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னையேன் ஒருவனைப் படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

மல் 2:16 தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்; அப்படிப்பட்டவன் கொடுமையினால் தன் வஸ்திரத்தை மூடுகிறான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஆகையால் நீங்கள் துரோகம்பண்ணாமல் உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

"அவர் ஒருவனையல்லவா படைத்தார்?" - ஆதியிலே தேவன் ஆதாமையும், ஏவாளையும் சிருஷ்டித்தார். ஒருவனுக்கு ஒருத்தி மாத்திரமே என்று தீர்மானம் பண்ணினார். புருஷனும், ஸ்திரீயும் விவாகம் பண்ணுவதில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். ஆனால் அவர்களுடைய விவாகத்தை அவர்கள் தள்ளிவிடுவதைக் கர்த்தர் வெறுக்கிறார். (மல் 2:16).

(5) தேவன் அநீதியானவரென்று அவர்மீது குற்றச்சாட்டு

மல் 2:17 உங்கள் வார்த்தைகளினாலே கர்த்தரை வருத்தப்படுத்துகிறீர்கள்; ஆனாலும் எதினாலே அவரை வருத்தப் படுத்துகிறோம் என்கிறீர்கள்; பொல்லாப்பைச் செய்கிறவனெவனும் கர்த்தரின் பார்வைக்கு நல்லவன் என்றும், அப்படிப்பட்டவர்கள்பேரில் அவர் பிரியமாயிருக்கிறாரென்றும், நியாயந் தீர்க்கிற தேவன் எங்கேயென்றும், நீங்கள் சொல்லுகிறதினாலேயே.

மல்கியா - தொகுப்புரை

3 அதிகாரம்

III. மேசியாவின் முதலாவது வருகையும் இரண்டாவது வருகையும் - (3:1-6)

1. மேசியாவின் முதலாவது வருகை - (மத் 3:1; 11:10; மாற் 1:2; லூக் 1:76; 7:27)

மல் 3:1 இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்; அப்பொழுது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்; இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

தீர்க்கதரிசன எண் - 4

"இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான்;........" (மல் 3:1-5) மல் 3:1 ஆவது வசனம் நிறைவேறிற்று. மல் 3:2-5 ஆகிய வசனங்கள் இன்னும் நிறைவேறவில்லை.

நிறைவேறிய முன்னறிவிப்புகள்

1. நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம்பண்ணுவான். (மல் 3:1).
2. நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்.
3. இதோ, வருகிறார் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார் (மல் 3:3).
2. அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்.
3. அப்பொழுது பூர்வநாட்களிலும் முந்தின வருஷங்களிலும் இருந்ததுபோல, யூதாவின் காணிக்கையும், எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும். (மல் 3:4).
4. நான் நியாயத்தீர்ப்பு செய்யும்படி உங்களிடத்தில் வருவேன். (மல் 3:5).
5. சூனியக்காரருக்கும் விபசாரருக்கும் பொய்யாணை இடுகிறவர்களுக்கும், எனக்குப் பயப்படாமல் விதவைகளும் திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக் கொள்ளுகிறவர்களுக்கும், பரதேசிக்கு அநியாயஞ்செய்கிறவர்களுக்கும் விரோதமாய்த் தீவிரமான சாட்சியாயிருப்பேன்.

"இதோ, நான் என் தூதனை அனுப்புகிறேன்" - இந்த வாக்கியம் மத் 11:10; மாற்கு 1:2; லூக்கா 1:76; லூக்கா 7:27 ஆகிய வசனங்களில் மேற்கோளாகக் கூறப்பட்டிருக்கிறது. "இதோ" என்பது மல்கியாவின் காலத்தைக் குறிக்கவில்லை. இது கர்த்தருடைய நாளில் உள்ள சந்ததியைக் குறிக்கிறது. மல் 2:17 ஆவது வசனத்தில் "நியாயந்தீர்க்கிற தேவன் எங்கே" என்னும் கேள்விக்கு இங்கு பதில் கூறப்பட்டிருக்கிறது.

"தூதன்" - யோவான்ஸ்நானன். (மத் 3:3; மத் 11:10; மாற்கு 1:2-3; லூக்கா 1:76; லூக்கா 3:4; லூக்கா 7:26-27; யோவான் 1:23; மத் 22:2-3; ஏசா 40:3-5).

3 அதிகாரம்

"வழியை ஆயத்தம்பண்ணுவான்" - பல இடங்களுக்கும் சென்று வழியிலுள்ள தடைகளை அகற்றிப்போடுவான். (ஏசா 40:3; ஏசா 62:10).

"ஆண்டவர்" - இது மேசியாவைக் குறிக்கும் வார்த்தை. எருசலேமில் அவர் ஜெயதொனியோடு பிரவேசிப்பார். (மத் 21:1-16; மாற்கு 11:1-11).

"தம்முடைய ஆலயம்" - செருபாபேல் கட்டிய ஆலயம் கர்த்தருக்காகக் கட்டப்பட்டிருக்கிறது. மேசியா வந்த ஆலயம் "என் பிதாவின் வீடு" "My Father's house" என்று அழைக்கப்படுகிறது. (யோவான் 2:16).

"உடன்படிக்கையின் தூதன்" - இயேசு கிறிஸ்துவே உடன்படிக்கையின் தூதனாக இருக்கிறார். தேவனுக்கும், மனுஷனுக்கும் நடுவில் புதிய உடன்படிக்கையை முன்னறிவித்திருக்கிறார். (ஏசா 42:6; ஏசா 49:8; ஏசா 55:3; ஏசா 56:6; ஏசா 59:21; ஏசா 61:8; எரே 31:31; எபி 8:6; எபி 12:24; எபி 13:20).

2. மேசியாவின் இரண்டாவது வருகை - கல்கக்காரர்கள் இஸ்ரவேலிலிருந்து அகற்றப் படுவார்கள் - (யோவே 2:11)

மல் 3:2 ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார்.

மல் 3:3 அவர் உட்கார்ந்து வெள்ளியைப்புடமிட்டுச் சுத்திகரித்துக் கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர் களாயிருக்கும் படிக்கும், நீதியாய் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்.

"அவர் வரும் நாள்" - ஒரே வசனப்பகுதியில் மேசியாவின் முதலாவது வருகையும், இரண்டாவது வருகையும் கூறப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள காலம் மல் 3:1 ஆவது வசனத்திற்கும், மல் 3:2 ஆவது வசனத்திற்கும் இடைப்பட்ட காலமாகும். மல் 3:1 ஆவது வசனம் இயேசு கிறிஸ்துவின் முதலாவது வருகையைக் குறிப்பிடுகிறது. அப்போது அவர் யூதருக்காகவும், தம்முடைய தேவாலயத்திற்காகவும் யோவான் ஸ்நானனுடைய நாட்களில் வந்தார். மல் 3:2-3 ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடுகிறது. இந்த வருகையில் அவர் நியாயந்தீர்ப்பதற்காக வருவார்.

மல் 3:4-6 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் முன்னறிவிப்புகள்

1. இஸ்ரவேல் மறுபடியும் ஸ்தாபிக்கப்படும். (மல் 3:4)
2. எல்லா பாவிகள்மீதும் நியாயத்தீர்ப்பு உண்டாகும். (மல் 3:5)
3. தமக்கு ஊழியம் செய்கிறவர்களைக் கர்த்தர் கடாட்சிப்பார். (மல் 3:17)

இவை தவிர மல்கியாவில் கூறப்பட்டிருக்கும் மற்ற முன்னறிவிப்புகள்

1. இஸ்ரவேலர் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். (மல் 3:18)
2. கர்த்தருடைய நாள் (மல் 4:1-3)
3. கர்த்தருடைய நாளில் இஸ்ரவேலுக்கு ஊழியம் செய்ய எலியா மறுபடியும் திரும்பி வருவார். (மல் 4:5-6).

3. அப்பொழுது - இஸ்ரவேல் மீட்கப்படும்

மல் 3:4 அப்பொழுது பூர்வநாட்களிலும் முந்தின வருஷங்களிலும் இருந்தது போல, யூதாவின் காணிக்கையும், எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்.

3 அதிகாரம்

"அப்பொழுது" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, அவர் மனுஷரை நியாயந்தீர்ப்பார், சுத்திகரிப்பார். அப்போது யூதாவின் காணிக்கையும், எருசலேமின் காணிக்கையும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும்.

4. எல்லோருக்கும் பரிபூரண நீதி கிடைக்கும் - யூதாவின் எட்டு பாவங்கள்

மல் 3:5 நான் நியாயத்தீர்ப்பு செய்யும்படி உங்களிடத்தில் வந்து, சூனியக்காரருக்கும் விபசாரருக்கும் பொய்யாணை இடுகிறவர்களுக்கும், எனக்குப் பயப்படாமல் விதவைகளும் திக்கற்ற பிள்ளைகளுமாகிய கூலிக்காரரின் கூலியை அபகரித்துக் கொள்ளுகிறவர்களுக்கும், பரதேசிக்கு அநியாயஞ்செய்கிறவர் களுக்கும் விரோதமாய்த் தீவிரமான சாட்சியாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர்சொல்லுகிறார்.

மல் 3:6 நான் கர்த்தர், நான் மாறாதவர்; ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை.

"நான் நியாயத்தீர்ப்பு செய்யும்படி உங்களிடத்தில் வந்து" - மேசியா பிரத்தியட்சமாகப் பூமிக்கு வருவார். ஜாதிகளை நியாயந்தீர்ப்பார். பல்வேறு பாவங்களுக்காகப் பாவிகளைச் சங்கரிப்பார். (மத் 24:31-46).

யூதாவிலுள்ள ஜனங்கள்

1. சூனியக்காரர்
2. விபசாரர்
3. பொய்யாணை இடுகிறவர்கள்
4. ஒடுக்குகிறவர்கள்
5. கர்த்தருக்குப் பயப்படாதவர்கள்

ஒடுக்கப்படுகிறவர்கள்

1. கூலி அபகரிக்கப்பட்ட கூலிக்காரர். (மல் 3:5)
2. விதவை
3. திக்கற்ற பிள்ளைகள்
4. பரதேசி

"நான் மாறாதவர்;" - கர்த்தர் தம்முடைய உடன்படிக்கையில் மாறாதவராக இருக்கிறார். ஆயினும் மனுஷருடைய சுயாதீன சித்தத்தின்படி, அவர்களுடைய கிரியைகளைப் பொருத்து அவர்களுக்கு நியமித்த தமது நியாயத்தீர்ப்பை நிறைவேற்றுவதில் கர்த்தர் மனம் மாறுகிறார். அவருடைய கிருபையின் நிமித்தமாகவும், இரக்கத்தின் நிமித்தமாகவும் மனுஷருக்கு வருமென்று அறிவித்த ஆக்கினையைத் தாமதப்படுத்துகிறார். ஆயினும் தேவனுடைய திட்டமும், நோக்கமும் ஒருபோதும் மாறுவதில்லை. தம்முடைய நோக்கத்தையும், திட்டத்தையும் செயல்படுத்தும் வழிகளைக் கர்த்தர் சில சமயங்களில் மாற்றுகிறார்.

IV. இஸ்ரவேலின் பாவங்கள் - (3:7-15)

1. யூதாவின் பின்மாற்றங்கள்

மல் 3:7 நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவைகளைவிட்டு விலகிப்போனீர்கள்; என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; நாங்கள் எந்த விஷயத்தில் திரும்ப வேண்டும் என்கிறீர்கள்.

"உங்கள் பிதாக்களின் நாட்கள் தொடங்கி" - கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்த நாள்தொடங்கி, மல்கியாவின் காலம் வரையிலும் அவர்கள் கர்த்தருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளாமல், அவைகளைவிட்டு விலகிப் போனார்கள்.

3 அதிகாரம்

"என்னிடத்திற்குத் திரும்புங்கள்" - கர்த்தர் பல சந்ததிகளிடம் இந்த வாக்கியத்தைக் கூறி வருகிறார். இதே வாக்கியத்தை இன்னும் கூறுவார். தம்மிடத்தில் ஜனங்கள் திரும்பி வந்தால், கர்த்தர் அவர்களோடு கூட இருந்து அவர்களுக்கு நன்மை செய்வார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரைவிட்டு விலகிப்போய் இருப்பதையே உணராமல் இருக்கிறார்கள்.

2. தேவனை வஞ்சித்தது - சாபம்

மல் 3:8 மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசம பாகத்திலும்காணிக்கைகளிலும்தானே.

மல் 3:9 நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்.

"மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா?" - (நீதி 22:22)

"தசமபாகத்திலும் காணிக்கைகளிலும் தானே" - கர்த்தர் மனுஷனோடு செய்து கொண்டஉடன்படிக்கையின்படி தசமபாகமும், காணிக்கைகளும் கர்த்தருக்குரியது. கர்த்தருக்குரியதை மனுஷர் வைத்துக் கொள்வது கர்த்தரை வஞ்சிக்கும் செயலாகும். (மல் 3:8-9).

"நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்" - கர்த்தரை வஞ்சிப்பதினால் மனுஷருக்குச் சாபம் வரும். இஸ்ரவேல் தேசத்தாருக்கு மட்டுமல்லாமல் கர்த்தரை வஞ்சிக்கிற யாவருக்கும் சாபம் வரும்.நியாயப்பிரமாணம்கொடுக்கப்படுவதற்கு முன்பாகவே தசமபாகம் செலுத்தப் பட்டிருக்கிறது. (ஆதி 14:20; ஆதி 28:22) புதிய ஏற்பாட்டில் கிருபையின் காலத்திலும் கர்த்தருக்குத் தசமபாகம் செலுத்த வேண்டும் என்னும் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத் 23:23; ரோமர் 2:22; 1கொரி 9:7-14; 1கொரி 16:2; கலா 6:6; எபி 7:1-10).

3. கட்டளையும் அழைப்பும்

4. ஏழு அம்ச ஆசீர்வாதம்

மல் 3:10 என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசம பாகங்களையெல்லாம் பண்ட சாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங் கொள்ளாமற்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

மல் 3:11 பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்; அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற் போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

மல் 3:12 அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்; தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும் படி" - ஆசாரியத்துவத்தையும், கர்த்தருடைய ஊழியங்களையும் ஆதரிப்பதற்காகத் தசமபாகமும் காணிக்கைகளும் சேகரிக்கப் படுகிறது. (1கொரி 9:7-14).

"பண்டசாலை" - இஸ்ரவேல் தேசத்தில் தேவாலயமும், லேவியருடைய பட்டணமும் பண்டசாலை என்று அழைக்கப்படுகிறது.

தசமபாகம் கொடுப்பதினால் ஆசீர்வாதங்கள் (மல் 3:10-12)

1. கர்த்தருடைய ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்.
2. கர்த்தர் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங் கொள்ளாமற் போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிப்பார்.

3 அதிகாரம்

3. பூமியின் கனியைப் பட்சித்துப் போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பார்.

4. எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்.

"தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும்" - கர்த்தருடைய ஆசீர்வாதம் வரும்போது தேசம் செழிக்கும். வனாந்தரம் நல்ல விளைச்சல் நிலமாகும். வறண்ட நிலங்களில் நீரூற்றுகள் உண்டாகும். (ஏசா 35).

5. தேவனுக்கு எதிராக முறுமுறுப்பும் கலகமும் - (ஏசா 1:2)

மல் 3:13 நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுகள் கடினமாயிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார்; ஆனாலும் உமக்கு விரோதமாக என்னத்தைப் பேசினோம் என்கிறீர்கள்.

மல் 3:14 தேவனைச் சேவிப்பது விருதா, அவருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளுகிறதினாலும், சேனைகளின் கர்த்தருக்கு முன்பாகத் துக்கித்து நடக்கிறதினாலும் என்ன பிரயோஜனம்?

"நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின பேச்சுகள் கடினமாயிருக்கிறது" - இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாகத் தொடர்ந்து கலகம் பண்ணுகிறார்கள். கர்த்தருக்கு எதிர்த்து நிற்கிறார்கள். மல்கியாவின் புஸ்தகத்தில் கர்த்தர் கூறிய 14 கட்டளைகளுக்கு இஸ்ரவேல் புத்திரர் பத்து இடங்களில் கலகமான மறுமொழிகளைக் கூறியிருக்கிறார். (மல் 1:2).

6. துன்மார்க்கர் உயர்த்தப்பட்டு நியாயத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்

மல் 3:15 இப்போதும் அகங்காரிகளைப் பாக்கியவான்கள் என்கிறோம்; தீமை செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள்; அவர்கள் தேவனைப் பரிட்சை பார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள்.

V. கர்த்தருடைய நாள் - (3:16-4:6)

1. கர்த்தருடைய நாளுக்கான ஆயத்தம் - மீதியாக இருக்கும் உண்மையுள்ளவர்கள் - (ஏசா 1:9)

மல் 3:16 அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள்; கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது.

"அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள்" - மனுஷர் கர்த்தருக்குப் பயப்படும்போது இந்தச் சம்பவம் நடைபெறும். மனுஷருடைய பேச்சைக் கர்த்தர் கவனித்துக் கேட்பார். கர்த்தருடைய சமுகத்தில் ஞாபகப்புஸ்தகம் ஒன்றுள்ளது. அதில் கர்த்தருக்குப் பயந்தவர்களின் பேச்சும், செயலும் எழுதப்பட்டிருக்கும்.

2. தமது சம்பத்தைச் சேர்ப்பதற்கு மேசியாவின் இரண்டாவது வருகை

மல் 3:17 என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர் களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்.

தீர்க்கதரிசன எண் - 5

"என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்......" (மல் 3:17-4:6) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

மல்கியா - தொகுப்புரை

3 அதிகாரம்

நிறைவேற வேண்டிய முன்னறிவிப்புகள்

1. என் சம்பத்தை நான் சேர்க்க வருவேன். (மல் 3:17).
2. நான் அவர்களைக் கடாட்சிப்பேன்.
3. அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கும் ஊழியஞ் செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ் செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள். (மல் 3:18).
4. சூளையைப்போல எரிகிற நாள் வரும். (மல் 4:1).
5. அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்.
6. என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும். (மல் 4:2).
7. நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.
8. துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின்கீழ் சாம்பலாயிருப்பார்கள் (மல் 4:3).
9. நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். (மல் 4:5).
10. எலியா பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான். (மல் 4:6).

விசுவாசிகளுக்கு ஒப்புமையாகக் கூறப்பட்டிருக்கிற காரியங்கள்

1. சம்பத்து (மல் 3:17)
2. கொழுத்த கன்றுகள் (மல் 4:2)
3. சூரியன் (நியா 5:31)
4. பொன் (யோபு 23:10)
5. கனிதரும் விருட்சம் (சங் 1)
6. மான் (சங் 42:1)
7. பச்சையான ஒலிவமரம் (சங் 52:8)
8. பனைமரம் (சங் 92:12)
9. கேதுருமரம் (சங் 92:12)
10. நட்சத்திரங்கள் (தானி 12:3)
11. கழுகுகள் (ஏசா 40:31; சங் 103:5)
12. சீயோன் மலை (சங் 125)
13. உப்பு (மத் 5:13)
14. வெளிச்சம் (மத் 5:14)
15. பட்டணம் (மத் 5:14)
16. விளக்கு (மத் 5:14)
17. கோதுமை (மத் 3:12-13)
18. பாலகர் (மத் 11:25)
19. மீன் (மத் 13:48)
20. ஊழியக்காரன் (மத் 25:21)
21. ஆடு (யோவான் 10; சங் 23)
22. கிளை (யோவான் 15)
23. ஆட்டுக்குட்டி (யோவான் 21)
24. மாளிகை (1கொரி 3:9)

மல்கியா - தொகுப்புரை

3 அதிகாரம்

25. பந்தயச்சாலையில் ஓடுகிறவர்கள் (1கொரி 9:24)

26. சரீரத்தின் அவயவங்கள் (1கொரி 12)

27. நிருபங்கள் (2கொரி 3:1-3)

28. ஸ்தானாபதிகள் (2கொரி 5:20)

29. தூண்கள் (கலா 2:9; வெளி 3:12)

30. போர்ச்சேவகர்கள் (2தீமோ 2:3)

31. மல்யுத்தம் பண்ணுகிறவன் (2தீமோ 2:5)

32. பாத்திரங்கள் (2தீமோ 2:20)

33. ஜீவனுள்ள கற்கள் (1பேதுரு 2:5)

34. ஆவிக்கேற்ற மாளிகை (1பேதுரு 2:5)

35. அந்நியர்களும், பரதேசிகளும் (1பேதுரு 2:11)

36. பிள்ளைகள் (1யோவான் 2:1,12)

3. இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுகிறது - (ஏசா 11:11)

மல் 3:18 அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் துன்மார்க்கனுக்கும், தேவனுக்கும் ஊழியஞ் செய்கிறவனுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காணபீர்கள்.

"திரும்பவும் காண்பீர்கள்" - இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய தேசத்திற்குத் திரும்பி வருவார்கள். அங்கு நீதிக்கும், அநீதிக்கும் இடையேயிருக்கிற வித்தியாசத்தைக் காண்பார்கள். (மத் 24:29-31; ரோமர் 11:25-29).

4 அதிகாரம்

4. தேவபக்தியற்றவர்களின் அழிவு - (2தெச 1:7-10; யூதா 14)

மல் 4:1 இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்" - இது கர்த்தருடைய நாளாகும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நாள் "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள்" **"the great and dreadful day of the Lord"** என்று அழைக்கப்படுகிறது. (மல் 4:5).

இந்த நாள் சூளையைப்போல எரியும். அகங்காரிகளையும், அக்கிரமம் செய்கிற யாவரையும் இந்த அக்கினி சுட்டெரிக்கும். அவருடைய சரீரம் முழுவதுமாக எரிந்துபோகும். எசே 38:17-23 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கிற பிரகாரம் அக்கினியும், கந்தகமும் வருஷிக்கப்படும். கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடு வரும்போது ஜுவாலித்து எரிகிற அக்கினியோடு வருவார். (2தெச 1:7-10) இந்த அக்கினி அதைப்போன்று ஜுவாலித்து எரியும். இது நரகத்தின் அக்கினியைக் குறிக்கவில்லை. இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது அர்மெகதோனில் யுத்தம் நடைபெறும் நாளைக் குறிக்கிறது. இந்த அக்கினி சோதோமையும், கொமோராவையும் பட்சித்த அக்கினியைப் போன்றது. (ஆதி 19:24) இது இஸ்ரவேல் புத்திரரில் பலரைப் பட்சித்த அக்கினியைப் போன்றது. (எண் 11:1).

துன்மார்க்கர் அனைவரும் ஒரே நாளில் அக்கினியில் தள்ளப்பட மாட்டார்கள். இங்கு அவர்கள் எல்லோரும் சுட்டெரிக்கப்படுகிறார்கள். நரகத்திற்குத் துன்மார்க்கர் ஒவ்வொருவராக அனுப்பப்படுவார்கள். இரண்டாம் உயிர்த்தெழுதலுக்குப் பின்பே துன்மார்க்கர் நரகத்திற்குப் போவார்கள். அங்கு அவர்கள் எரிகிற அக்கினியில் தள்ளப்படுவார்கள். அங்கு அவர்கள் வேகமாட்டார்கள். இரவும், பகலும் நரகத்தின் அக்கினி அவர்களை வாதிக்கும். (ஏசா 66:22-24; மத் 25:41,46; மாற்கு 9:41-49; வெளி 14:9-11; வெளி 20:11-15).

இந்த வசனப்பகுதியில் கூறப்பட்டிருக்கும் அக்கினி சரீர மரணத்தை உண்டாக்கும் அக்கினியாகும். இரண்டாம் உயிர்த்தெழுதல் நடைபெறும் வரையிலும் ஆவியும், ஆத்துமாவும் மட்டுமே பாதாளத்திற்கு அனுப்பப்படும். (லூக்கா 16:19-21).

5. நீதிமானுக்கு இரட்சிப்பு

மல் 4:2 ஆனாலும் என் நாமத்துக்குப் பயந்திருக்கிற உங்கள்மேல் நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப் போய், கொழுத்த கன்றுகளைப்போல வளருவீர்கள்.

"என் நாமத்துக்குப் பயந்திருக்கிற" - கர்த்தரிடத்தில் பயபக்தியாயிருக்கிற.

"நீதியின் சூரியன்" **(the Sun of righteousness)** - இயேசு கிறிஸ்துவே நீதியின் சூரியனாக இருக்கிறவர். தம்முடைய இரண்டாம் வருகையின்போது இயேசு கிறிஸ்து பூமியிலுள்ள அனைவருக்கும் ஆரோக்கியத்தைத் தருவார். அவர் ஆளுகை செய்யும்போது யாரும் வியாதியில் இருக்கமாட்டார்கள். (ஏசா 33:24; ஏசா 35:5-7; எசே 47:12).

"செட்டைகள்" - இதற்கான எபிரெய வார்த்தை "கனாப்" **(kanaph)** என்பதாகும். இந்த வார்த்தைக்கு சுற்றி மூடியிருப்பது என்று பொருள். இயேசு கிறிஸ்துவிடமிருந்து சுகமாக்கும் ஒளிக்கதிர்கள் புறப்பட்டுப்போகும். இவை மனுஷரைச் சுற்றி மூடும். இந்தக் கதிர்கள் பூமியிலுள்ள மனுஷர் அனைவரையும் குணமாக்கும்.

மல்கியா - தொகுப்புரை

4 அதிகாரம்

செட்டைகள் (wings) - כָּנָף - kaw-nawf' - 3671

பெண்பால் பெயர்ச்சொல் - சிறகு, செட்டை, போர்வை, தொங்கல், இறகு, வஸ்திரம், (an edge or extremity; wing)

6. அர்மகெதோனில் துன்மார்க்கர் நீதிமான்களுடைய உள்ளங் கால்களின் கீழ் சாம்பலா யிருப்பார்கள் - (எசே 38:22; 39:6-16)

மல் 4:3 துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான் இதைச் செய்யும்நாளிலே அவர்கள் உங்கள் உள்ளங்கால்களின் கீழ் சாம்பலாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

"துன்மார்க்கரை மிதிப்பீர்கள்" - அர்மெகதோன் யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரர் துன்மார்க்கரை மிதிப்பார்கள். வானத்திலிருந்து கந்தகமும், அக்கினியும் பூமியில் விழும். இதனால் துன்மார்க்கர் சாம்பலாவார்கள். (எசே 38:17-22; 2தெச 1:7-10).

7. யூதாவிற்கு கடைசி புத்திமதி

மல் 4:4 ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும், நியாயங்களையும் நினையுங்கள்.

"என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும், நியாயங்களையும் நினையுங்கள்" - இது மோசேயின் பிரமாணத்தை நினைவுகூர வேண்டுமென்று பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் கடைசி கட்டளையாகும். இயேசு கிறிஸ்து கல்வாரி சிலுவையில் பழைய ஏற்பாட்டின் பிரமாணங்களை ஒழித்தார். (2கொரி 3; கலா 3:19-25; கலா 4:21-31; கொலோ 2:14-17; எபி 7) புதிய உடன்படிக்கையில் மோசேயின் நியாயப் பிரமாணத்தைக்கடைப்பிடிக்கவேண்டுமென்று எங்கும் கூறப்படவில்லை. ஆகையினால் இந்த வாக்கியம் கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பிருந்த பழைய ஏற்பாட்டுக் காலத்து ஜனங்களுக்கு மாத்திரமே பொருந்தும்.

8. மேசியாவின் முதலாவது வருகைக்கு முன்பு யூதாவிற்கு கூறப்பட்ட கடைசி தீர்க்கதரிசனம் - மேசியாவின் இரண்டாவதுவருகைக்குமுன்பாக யூதாவிற்குஊழியம் செய்வதற்கு எலியா திரும்பிவருவார்- (வெளி 11)

மல் 4:5 இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்.

மல் 4:6 நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.

"நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்" - இந்த வாக்கியம்பழையஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் கடைசிதீர்க்கதரிசனமாகும். தீர்க்கதரிசியாகிய எலியா வானத்திலிருந்து பூமிக்கு வருவார். கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே அவர் பூமிக்கு வருவார். (மல் 4:5-6). அக்காலத்தில் பூமியில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிருக்கும். குடும்பங்கள் கிறிஸ்துவில் இணைக்கப்படும். பரிசுத்த ஆவியானவர் மாம்சமான யாவர்மீதும் ஊற்றப்படுவார். எலியா, ஏனோக்கு ஆகியோரின் ஊழியங்களின் மூலமாக இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள். (மல் 4:5-6) பிதாக்களுடைய இருதயங்களும், பிள்ளைகளுடைய இருதயங்களும் ஒன்றுசேரும். இக்காலத்தில் வெளி 11:3-10; அப் 2:16-21; ரோமர் 11:25-29; ஏசா 66:7-8 ஆகிய வசனங்கள் நிறைவேறும்.